


**07.06.2025**

## தலைப்பு செய்திகள்

1. விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டவே சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

4. தமிழகத்தில் ஆயிரத்து 256 இடங்களில் நலம் காக்கும் மருத்துவ திட்டம் தொடங்கப்பட உள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டிக்கு இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

************

### பிரதமர் - வேளாண்

விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் 11 ஆண்டு கால ஆட்சி நிறைவை ஒட்டி பிரதமர் வெளியிட்ட செய்தியில் நாட்டின் நலனுக்காக அரும்பாடுபடும் விவசாயிகளுக்கு சேவை செய்வதை நல்வாய்ப்பாக கருதுவதாக கூறினார்.

கடந்த ஆண்டுகளில் மண்வளம், நீர்பாசனம், ஒரு துளி நீர் அதிக மகசூல், வேளாண் பொருட்களுக்கான ஈ-நாம் மின்னணு சந்தை உள்ளிட்ட பல்வேறு முன்னோடி திட்டங்களால் விவசாயிகளின் வாழ்வு வளம்பெற்று வேளாண் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

************

### பிரதமர் - கனடா

இந்தியா கனடா இடையேயான இருதரப்பு பரஸ்பர நலன்களை மேம்படுத்துவதில் உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கனடா கனனாஸ்கியில் வரும் 15ஆம் தேதி தொடங்கும் ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்க அந்நாட்டு பிரதமர் மார்க் கேர்னி அழைப்பு விடுத்துள்ள நிலையில் தமது

இந்த பயணத்தை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக சமூகவலைதளத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தின் ஆக்கப்பூர்வமான சக்தியாக விளங்கும் இந்தியா கனடா இடையே பரஸ்பர நம்பிக்கை, மக்கள் தொடர்பு மற்றும் நலன்களை மேம்படுத்த தமது இந்த பயணம் வகை செய்யும் என அவர் கூறியுள்ளார்.

கனடா பிரதமராக மார்க் கோர்னி தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

************

**அமித்ஷா**

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வருகிறார்.

மதுரையில் நாளை நடைபெறும் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்கும் அவர் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தல் வியூகங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்வார் என தெரிகிறது.

************

**முருகன்**

நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டவே சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகம் உட்பட எந்த மாநிலத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் மக்களவை தொகுதி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

அனைவருக்கும் சமமான நீதி வழங்கவே தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுவதாக கூறிய அமைச்சர், இவ்விசயத்தில் திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் மக்களை திசை திருப்புவதாக குற்றம் சாட்டினார்.

**வாய்ஸ்**

தமிழ் கலாச்சாரத்தை பறைசாற்றும் வகையில் காசி, சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதாக கூறிய அவர் அதேவகையில் முருகன் மாநாட்டை மதுரையில் நடத்துவது சரியானதாக இருக்கும் என குறிப்பிட்டார்.

முன்னதாக சமூகவலைதளத்தில் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு வேளாண் துறைக்கு முன்னுரிமை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கிசான் சம்மான்நிதி, ஒரு துளி நீர் அதிக மகசூல், வேளாண் பொருட்களுக்கான மின்னணு சந்தை உள்ளிட்ட மத்திய அரசின் திட்டங்கள் விவசாயிகளின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளதாக கூறினார்.

************

**வறுமை ஒழிப்பு**

தீவிர வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

சுகாதாரம், கல்வி, மக்களின் வாழ்க்கை முறை மேம்பாடு உள்ளிட்ட நடவடிக்கைகளால் கடந்த 11 ஆண்டுகளில் 27 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கான மத்திய அரசின் இலவச வீட்டுவசதி, சமையல் எரிவாயு இணைப்பு, நேரடி பணபரிமாற்ற சேவை, மின்னணு ஒருங்கிணைப்பு, பொருளாதார ஆளுமை உள்ளிட்டவற்றால் இது சாத்தியமானதாக உலக வங்கி பாராட்டியுள்ளது.

குறிப்பாக உத்திரபிரதேசம், மகராஷ்டிரா, பீகார், மேற்குவங்கம், மத்திய பிரதேச மாநிலங்களில் இது 65 சதவிகிதமாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

************

**திமுக கூட்டம்**

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

காணொலி மூலம் நடைபெற்ற இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட செயலாளர்கள், கட்சியின் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி உறுப்பினர் சேர்க்கை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

************

**பக்ரீத்**

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுதலைவர் விடுத்த வாழ்த்து செய்தியில் தியாகம், பக்தி, உன்னத கொள்கைகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு சமூகத்திற்காக ஒன்றிணைந்து பணியாற்ற நாம் அனைவரும் உறுதியேற்போம் என குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் விடுத்த வாழ்த்து செய்தியில் நல்லிணக்கத்தையும், அமைதியையும் நிலைநாட்டி ஆரோக்கியத்துடனும், செழிப்புடனும் வாழ வாழ்த்தியுள்ளார்.

நெல்லை மேலப்பாளையத்தில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். :

**வாய்ஸ்**

உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்கா, சென்னை திருச்சி தூத்துக்குடி ராணிப்பேட்டை திண்டுக்கல் திருவண்ணாமலை தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் பக்ரீத் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன.

************

**மா.சுப்பிரமணியன்**

தமிழகத்தில் ஆயிரத்து 256 இடங்களில் நலம் காக்கும் மருத்துவ திட்டம் தொடங்கப்பட உள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் ஆயிரம் முதல் 4 ஆயிரம் ரூபாய்க்குள் பொதுமருத்துவம், இருதயவியல், நரம்பியல் பரிசோதனைகள் உள்ளிட்ட முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றார்.

**வாய்ஸ்**

தமிழகத்தில் மருத்துவமனை கட்டிடங்கள் நவீன உயர்தர மருத்துவம் உள்ளிட்ட சுகாதார திட்டங்கள் உயர் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படுதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக மாவட்டத்தில் ராசிபுரம், பேளுக்குறிச்சி, முத்துக்காப்பட்டியில் எட்டரை கோடி ரூபாய் மதிப்பில் சுகாதார கட்டமைப்பு சார்ந்த 13 திட்டப்பணிகளுக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

************

**தண்ணீர் திறப்பு**

திருப்பூர் மாவட்டம் உடுமலை அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்கான தண்ணீரை மாநில அமைச்சர்கள் திரு.மு.பெ.சாமிநாதன், திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இன்று திறந்துவைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு.சாமிநாதன் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அமராவதி பிரதான கால்வாயில் வரும் 20ஆம் தேதி தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்தாண்டு தென்மேற்கு பருவமழை முன்னதாகவே தொடங்கி அணையின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில் விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இன்று தண்ணீர் திறக்கப்பட்டதன் மூலம் திருப்பூர், உடுமலை மடத்துக்குளம் வட்டங்களில் 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்றார்.

************

**மூர்த்தி**

மதுரை விஸ்வநாதபுரம் பாலமந்திரம் மேல்நிலைப்பள்ளியில் ஒரு கோடியே 17 லட்ச ரூபாய் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று திறந்துவைத்தார்.

************

**உணவு பாதுகாப்பு தினம்**

சர்வதேச உணவு பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நீரே வாழ்க்கை, நீரே உணவு என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் உணவு உற்பத்தி, உட்கொள்ளுதல் உள்ளிட்டவற்றில் நீரின் இன்றியமையாத பங்கை எடுத்துரைக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மேலும் மேம்பட்ட உணவு பாதுகாப்பு, அனைவருக்கும் உணவு உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

************

**செல்வ மகள் சேமிப்பு**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் செல்வ மகள் சேமிப்பு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு.அருள்தாஸ் தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் 250 ரூபாய் முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்வரை செலுத்தக்கூடிய இத்திட்டத்தை பெற்றோர்கள் பயன்படுத்தி பெண் குழந்தைகளின் நலனை பாதுகாக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

பெண்குழந்தைகளின் பாதுகாப்பிற்கான இந்த சேமிப்பு திட்டம் மிகுந்த பயனளிப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

**வாய்ஸ்**

************

**இருவரி**

**தமிழகத்தில் பொறியியல் படிப்பிற்கான** கலந்தாய்விற்கு வரும் 9ஆம் தேதிவரை மாணாக்கர் இணையதளத்தில் சான்றிதழை பதிவேற்றம் செய்யலாம் என உயர்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

**திருச்சி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள்** மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கான சிறப்பு குறைதீர் நாள் கூட்டம் வரும் புதன்கிழமை நடைபெற உள்ள நிலையில் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக அளிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் நில உரிமையாளர்கள்** தங்களது நிலங்களை அளவீடு செய்ய அரசின் தமிழ் நிலம் இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் க்ரிஷி** சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம் தென்காசி மாவட்டம் ரமண சமுத்திரம், தெற்கு கடையம், மந்தியூர் கிராமங்களில் இன்று நடைபெறுகிறது.

************

**தீ விபத்து**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உப மின் நிலைய எண்ணெய் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் தீயை அணைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கயத்தாறு அருகே அய்யனார் ஊத்துப்பகுதியில் தமிழக மின்வாரியத்திற்கு சொந்தமான மின்நிலைய எண்ணெய் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டது.

************

**டென்னிஸ்**

தாஷ்கண்டில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டிக்கு இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் முன்னேறினார்.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் அவர் ரஷ்யாவின் **Ksenia Laskutova-**வை 7-6 6-3 என்ற நேர் செட்களில் வென்றார்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**